2022 ஏப்ரல் 28]

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–க்கு தளர்வு அளித்து பழங்குடியினர் சமுதாய வளர்ச்சிக்காக 1 ஹெக்டேர் வரையிலான வன நிலங்களை வனமற்ற பணிகளுக்குப் பயன்படுத்த உரிமை அளிக்கப்பட்டு வருகிறது. இதனை நடைமுறைக்குக் கொண்டுவர, கிராமச் சபை அளவிலான வன உரிமைக் குழுக்கள்*—Forest Rights Committee, *துணைக் கோட்டக் குழுக்கள்*—Sub–Divisional Level Committees *மற்றும் மாவட்ட குழுக்கள்*—District Level Committees *அமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டத்தின்கீழ் கிராம சபையின் பரிந்துரையின்படி ஒரு ஹெக்டேர் வரையிலான வன நிலங்களை பள்ளிகள், மருந்தகம் அல்லது மருத்துவமனை, அங்கன்வாடிகள், நியாய விலைக் கடைகள், மின்சாரம் மற்றும் தொலைதொடர்புப் பணிகள், தொட்டிகள் மற்றும் இதர சிறு நீர்நிலைகள், குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர்க் குழாய்கள், நீர் அல்லது மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள், சிறு பாசனக் கால்வாய்கள், மரபுசாரா ஆற்றல் ஆதாரங்கள், திறன் மேம்பாடு, தொழிற்பயிற்சி மையங்கள், சாலைகள் மற்றும் சமுதாய மையங்கள் போன்ற வனமற்ற சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்ய மாவட்ட வன அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 197, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

197—

துணை மின் நிலையம்

***7405—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதி, வெள்ளலூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தினுடைய மின் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக 2021–2022 ஆம் ஆண்டு 216 துணை மின் நிலையங்கள், 2022–2023 ஆம் ஆண்டு 100 துணை மின் நிலையங்கள் என இரண்டே ஆண்டுகளில் 316 துணை மின் நிலையங்களை வழங்கி வரலாற்றுச் சாதனையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைப்பதற்கு உத்தரவுகளை வழங்கியிருக்கிறார்கள். அதில் கோவை மாவட்டத்தில் 2021–2022 ஆம் ஆண்டிற்கு 6 துணை மின் நிலையங்களும், 2022–2023 ஆம் ஆண்டு 7 துணை மின் நிலையங்களும், ஆக மொத்தம் 13 துணை மின் நிலையங்கள் அமையப்படவுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அளித்திருக்கின்ற வினாவின் அடிப்படையில், கிணத்துக்கடவு தொகுதி, வெள்ளலூர் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.*

திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போத்தனூர் துணை மின் நிலையத்திலிருந்துதான் போத்தனூர், வெள்ளலூர், செட்டிபாளையம், நஞ்சுண்டாபுரம் பகுதிகளுக்கு தற்போது மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட நான்கு பகுதிகளில் மட்டும் வீட்டு மின்னிணைப்பு சுமார் 49,500 இருக்கும் என்று தெரிய வருகிறது. அத்துடன் அதே மின் நிலையத்திலிருந்து 2,000–க்கும் மேற்பட்ட பெரிய மற்றும் சிறிய தொழிற்சாலைகளுக்கும் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 25* HT *மின் இணைப்பும் இதே போத்தனூர் துணை மின் நிலையத்திலிருந்துதான் கொடுக்கப்பட்டு வருகிறது. நான் மேலே குறிப்பிட்டுள்ள 4 பகுதிகள் மிகவும் வேகமாக வளர்ந்துவரும் பகுதிகளாகும். இதே பகுதியில் மின் வாரியத்தின் மூலமாக தொழிற்சாலைகள், வீட்டுமனைகள், வணிக வளாகங்கள், அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு தற்காலிக மின் இணைப்புக்கென்று தினந்தோறும் ஒவ்வொரு அலுவலகத்திலிருந்தும் 25–க்கும் மேற்பட்ட மின் இணைப்புகள்*

2022 ஏப்ரல் 28]

வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் மேற்கண்ட பகுதிகளில் மின் பற்றாக்குறை இருந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு வாருங்கள். துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்று கேள்வியைக் கேளுங்கள். அவ்வளவுதானே.*

திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெள்ளலூர் பகுதியில் துணை மின் நிலையம் அமைத்துத் தந்து அந்தப் பகுதியினுடைய மின் தேவையைப் பூர்த்தி செய்துகொடுப்பார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவு தொகுதியில் சீரான மின் விநியோகம் செய்வதற்காக 32 புதிய மின்மாற்றிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அமைக்கப்பட்டுள்ளன. மேலும், கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட ஒத்தக்கால் மண்டபத்தில் இருக்கக்கூடிய துணை மின் நிலையத்தின் தரத்தை மேம்படுத்துவதற்காக ரூ.2 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலான பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள வெள்ளலூர் பகுதிக்கு வரும் ஆண்டுகளில் தேவையின் அடிப்படையில், முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன் அவர்கள்.*

திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே துணை மின் நிலையம் அமைப்பதற்காக இடம் மாநகராட்சி மூலமாகத் தேர்வு செய்யப்பட்டு அந்த இடம் மாநகராட்சி குப்பைக் கிடங்கின் உள்ளே இருப்பதனால், சற்று தள்ளி இருக்க வேண்டும் என்று மின்*

வாரிய அலுவலர்கள் சொன்னதன் அடிப்படையில், இடத்தினை தள்ளிக் கொடுப்பதற்குக்கூட மாநகராட்சி நிர்வாகமும் தயாராக இருப்பதாகத் தெரிகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து விசாரித்து குப்பைக் கிடங்கிலிருந்து சற்றுத் தள்ளி துணை மின் நிலையத்தினை அமைத்திட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிணத்துக்கடவு–பொன்மலை வேலாயுதசாமி தேர் உலா வருடந்தோறும் நடைபெற்று வருகின்றது. அப்போது தேர் செல்கின்ற பாதையில் உள்ள மின் கம்பத்தில் கட்டப்பட்டுள்ள மின் கம்பிகள் கீழே இறக்கப்பட்டு மின் தடைகள் ஏற்படுவதும், பின் தேர் சென்ற பிறகு மின் கம்பத்தில் மீண்டும் மின் கம்பிகளைக் கட்டுவதுமான நிலை உள்ளது. எனவே, அந்தப் பகுதி மக்கள் மற்றும் மின் ஊழியர்களின் நலன் கருதி, கிணத்துக்கடவு தேரோடும் வீதியில் உள்ள மின் கம்பிகளைப் புதைவட மின் கம்பிகளாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டுகளில் வெள்ளலூர் பகுதியிலுள்ள மின் இணைப்பு நிலையங்களின் கணக்கீட்டின் அடிப்படையில் துணை மின் நிலையங்களுக்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருவாரூர் உள்ளிட்ட 3 திருக்கோயில் பணிகளுக்கு உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்தத் திருக்கோயில் தேரோட்டத்தினுடைய மின் பாதைகளை புதைவடங்களாக அமைக்கக்கூடிய பணிகள் குறித்து, வரக்கூடிய ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, எந்தெந்தத் திருக்கோயில்கள் மிக முக்கியமானவை என்பதை அரசு கவனத்திற்கு எடுத்துக்கொள்ளும் என்பதை

2022 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர் அவர்கள்.*

திரு. R.D. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பெரம்பூர் தொகுதி, கவியரசு கண்ணதாசன் நகரில் உள்ள துணை மின் நிலையத்தை 110 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தித் தர கடந்த ஆண்டு கோரிக்கை வைத்திருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஆவன செய்வதாகக் கூறியிருந்தார்கள். எனவே, அந்தப் பணி எந்த நிலையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையில், 12 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியை வழங்கியிருக்கின்றார்கள். அந்த 12 துணை மின் நிலையங்களில் பெரம்பூர் தொகுதியில் 2 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. விரைவில் திட்ட மதிப்பீட்டிற்கான* tender *முடிந்த பிறகு, அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.*

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர், மக்களின் முதல்வர் அவர்களுக்கு, கும்மிடிப்பூண்டி தொகுதியின் சார்பாக என் நெஞ்சார்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கும்மிடிப்பூண்டி தொகுதி, ஆந்திர எல்லையோரம் இருக்கின்ற பகுதி. அங்கே ஆரம்பாக்கம், தோக்கமூர், பூவளை, நாயுடுகுப்பம், எகுமதுரை போன்ற கிராமங்கள், ஆந்திர எல்லையோரம் இருப்பதால் நீண்டதூரம் மின்தடம் செல்கின்றது. அங்கே ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இருந்தும்,*

அங்கே குறைந்தழுத்த மின்சாரம், low voltage மின்சாரம் வந்துகொண்டிருக்கின்றது. அங்கே ஒரு தானியங்கி மின்மாற்றி (auto switch) அமைத்து, ஒரு மின் வாரிய துணைப் பொறியாளர் அலுவலகமும் அமைத்துத் தர வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில் 16 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதில் கும்மிடிப்பூண்டி தொகுதியிலும் ஒரு துணை மின் நிலையம் அமையவிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற வினாவின் அடிப்படையில் வாரியத்தின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, தேவையின் அடிப்படையில் அதற்கான பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

198—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***15512—திரு. சபா. இராசேந்திரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதியில் உள்ள ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*